களையும் பாக்கையும் தொகுத்துவைத்துக் கொள்வார். அவற்றைக் கொண்டு வேறுபண்டம் வாங்கிக்கொள்வார்.

அவர் இருக்கும் இடத்தில் சிலர் உடன் இருந்துகொண்டே இருப்பார்கள். அவர் ஏதாவது பாடல்களைச் சொல்லிப் பொருள் கூறிக்கொண் டிருப்பார். சொல்லிச்சொல்லிப் பழகவேண்டு மென்பது அவர் கொள்கை. "கம்பத்தைவைத்துக் கொண்டாவது பாடஞ்சொன்னால்தான் படித்தவைகளை மறவாமல் இருப்போம். பாடங் கேட்பவனை மாத்திரம் உத்தேசித்துச் சொல்லவே கூடாது. நமக்கே அது பிரயோசனம்; கல்வி அபிவிருத்தி உண்டாகும்". என்று அவர் அடிக்கடி சொல்வார்.

ஒருநாள் அவர் வீட்டுத்திண்ணையில் இருந்து மிக இரைந்து யாருக்கோ நெடுநேரம் பாடஞ்சொல்லிக் கொண்டிருந்தார். நான் எங்கள் வீட்டுக்குள் இருந்தே கேட்டுக்கொண்டிருந்தேன். தடையொன்று மில்லாமல் சொல்லிக் கொண்டேவந்தார். "கேட்பவர் இடையில் சந்தேகம் ஒன்றும் கேட்கமாட்டாரா?" என்று நான் நினைத்தேன். சிறிதுநேரம் கழித்து வெளியில் வந்துபார்த்தேன். அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தவர் கோபாலசாமி ஐயங்காரென்ற ஒரு முழுச்செவிடர். எனக்கு உண்டான ஆச்சரியத்துக்கு எல்லையே இல்லை. அவர் செவிடர் என்பது ஐயங்காருக்கும் தெரியும். "கேட்பவனை மாத்திரம் உத்தேசித்துச் சொல்லவே கூடாது; நமக்கே அது பிரயோசனம்" என்று தாம் சொன்ன வார்த்தைகளை ஐயங்கார் செயலிற் காட்டுகிறாரென்று எண்ணிக் கொண்டேன். பாடஞ்சொல்வதில் அவருக்கு இருந்த அளவற்ற பிரீதி இதனால் விளங்குகிறதல்லவா?

